**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் கந்தர்வகோட்டை.**
**மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற உத்தரவு**
**ROC.No.814/2020/RG/F1, P.Dis. No.36/2021 Dated 07.04.2021**
**ஆண்டுப்பட்டிகை வழக்கு எண். 122/2025**
**வழக்கின் சுருக்கம்**

| | | | |
|---|---|---|---|
| 1. | எதிரி நீதிமன்ற காவலில் இருந்த காலம் | : | எதிரி 28.06.2025 அன்று கைது செய்யப்பட்டு, அன்றைய தினமே நிலைய பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார். |
| 2. | இறுதி அறிக்கை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட நாள் | : | 29.09.2025 |
| 3. | குற்றம் குறித்து கேள்வி கேட்கப்பட்ட நாள் | : | 11.03.2026 |
| 4. | தாக்கல் செய்யப்பட்ட குற்ற பல்வகை மனுக்களின் விவரம் | : | (i) எதிரி மற்றும் நிகழ்நிலை புகார்தாரர் தரப்பில் BNSS பிரிவு 359–ன் படி CMP. No. 362/2026ல் தாக்கல் செய்யப்பட்ட சமாதான மனு 11.05.2026ம் தேதி தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.<br>(ii) அரசுத் தரப்பில் BNSS பிரிவு 348–ன் படி CMP. No. 467/2026ல் தாக்கல் செய்யப்பட்ட மனு 22.05.2026ம் தேதி அனுமதிக்கப்பட்டுள்ளது |
| 5. | அரசு தரப்பு சாட்சிகள் விசாரணை செய்யப்பட்ட நாள் | : | (see table below) |
| 6. | BNSS பிரிவு 351(1)(ஆ)இன் கீழ் எதிரியிடம் கேள்வி கேட்கப்பட்ட நாள் | : | 26.05.2026 |

Item 5:

| முதல் விசாரணை | குறுக்கு விசாரணை |
|---|---|
| அ.சா.1– 07.05.2026 | இல்லை |
| அ.சா.2– 11.05.2026 | இல்லை |
| அ.சா.3– 22.05.2026 | இல்லை |
| அ.சா.4–22.05.2026 | 22.05.2026 |

| | | | |
|---|---|---|---|
| 7. | எதிரி தரப்பு சாட்சிகள் விசாரணை செய்யப்பட்டநாள்: | | இல்லை |
| 8. | தலைமறைவு எதிரி பற்றிய விவரம் | : | இல்லை |
| 9. | மேல்முறையீட்டு நீதிமன்றத்தால் பிறப்பிக்கபட்ட இடைக்கால தடை உத்தரவு பற்றிய விவரங்கள் | : | இல்லை |

SIVAPALANI Digitally signed by SIVAPALANI Date: 2026.05.26 16:01:48 +0530

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**கந்தர்வகோட்டை.**

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், கந்தர்வகோட்டை**

**முன்னிலை: திரு. நா.சிவபழனி, B.A., B.L.,**

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், கந்தர்வகோட்டை.

**2026ஆம் ஆண்டு மே திங்கள் 26ஆம் நாள் செவ்வாய்க் கிழமை**

திருவள்ளுவராண்டு 2057 ஸ்ரீபராபவ வருடம் வைகாசி திங்கள் 12ம் நாள்

**ஆண்டுப்பட்டிகை வழக்கு எண். 122/2025**

**(CNR. No. TNPD-11001062-2024)**

| | | |
|---|---|---|
| 1 | வழக்கு எண் | சிசி. எண்.122/2025 |
| 2 | காவல் நிலையத்தின் பெயர் மற்றும் குற்ற எண் | கந்தர்வக்கோட்டை காவல் நிலையம் குற்ற எண்.119/2025 |
| 3 | குற்றமுறையிடுபவர் | காவல் உதவி ஆய்வாளர் கந்தர்வக்கோட்டை காவல் நிலையம் |
| 4 | எதிரியின் விபரம்<br>பெயர்<br>வயது<br>தந்தையின் பெயர்<br>குடியிருப்பு | முத்துகுமார், வயது 42/2025<br>த/பெ. ராமச்சந்திரன்<br>நடுத்தெரு, மருங்கூரணி,<br>கந்தர்வக்கோட்டை தாலுகா,<br>புதுக்கோட்டை மாவட்டம். |
| 5 | சம்பவ நாள் | 04.06.2025 |
| 6 | முறையீடு | 04.06.2025 |
| 7 | கைது | 28.06.2025 |
| 8 | பிணையில் விடுவித்தல் | 28.06.2025 |
| 9 | விசாரணை துவக்கம் | 07.05.2026 |
| 10 | விசாரணை முடிவு | 22.05.2026 |
| 11 | தண்டனை அல்லது உத்தரவு | முடிவாக, எதிரி சட்டப்பிரிவுகள் 296(b), 118(1), 351(3) BNSன் கீழ் குற்றவாளி இல்லை என்று முடிவு செய்து, எதிரியை BNSS பிரிவு 271(1)-ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது. |
| 12 | தீர்ப்புரை நகலை வழங்குவது அல்லது குற்றம் சாட்டப்பட்டவர் மீதான காண் முடிவு | -- |
| 13 | கால தாமததிற்கான விளக்கம் | காலதாமதம் இல்லை |



SIVAPALANI Digitally signed by SIVAPALANI Date: 2026.05.26 16:01:54 +0530

இவ்வழக்கு 03.10.2025ம் தேதி கோப்பிற்கு எடுக்கப்பட்டு 26.05.2026ம் தேதி என் முன் இறுதி விசாரணைக்கு வந்தபோது அரசுக்காக அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் நிலை–1 அவர்களும், எதிரிக்காக கற்றறிந்த வழக்கறிஞர் **திரு. S.முருகேசன், B.Sc., B.L.** அவர்களும் முன்னிலையாகி இருதரப்பு வாதங்களைக் கேட்டும், சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்களை பரிசீலணை செய்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.

**தீர்ப்புரை**

**2. அரசுத்தரப்பு வழக்கின் சுருக்கம்:–**

கடந்த 04.06.2025ம் தேதி இரவு 08.30 மணியளவில், பட்டியல் சாட்சி–1 மருதாம்பாள் என்பவரும் அவரது கணவரான பட்டியல் சாட்சி–2 ராமச்சந்திரன் என்பவரும் மருங்கூரணியில் உள்ள அவர்களது வீட்டின் வாசலில் உட்கார்ந்திருந்தபோது, அங்கு வந்த எதிரி பட்டியல் சாட்சி–2ஐ பார்த்து என்னடா புண்டா மகனே தேவுடியா மகனே எனக்கு குடிக்க காசு கொடுடா என்று அசிங்கமாக பேசியும், பட்டியல் சாட்சி–2 ஏன்டா இப்படி அசிங்கப்படுத்துறேன்னு சொல்லிக் கொண்டிருந்தபோது, எதிரி இடுப்பில் வைத்திருந்த இலை அறுக்கும் கத்தியை எடுத்து பட்டியல் சாட்சி–2இன் கழுத்தில் கீறி சிறுகாயத்தை ஏற்படுத்தியும், கையில் வைத்திருந்த கத்தியை காட்டி உன்ன கொல்லாம விடமாட்டேன் என கொலைமிரட்டல் விடுத்தும் குற்றம் புரிந்துள்ளார். எனவே, எதிரி மீது சட்டப்பிரிவுகள் 296(b), 118(1), 351(3) BNSஇன் கீழ் ஆதனக்கோட்டை காவல் உதவி ஆய்வாளர் குற்றயிறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

3. வழக்கு கோப்பிற்கு எடுக்கப்பட்டு, எதிரிக்கு அழைப்பாணை அனுப்பி எதிரி நீதிமன்றத்தில் முன்னிலையானபோது, எதிரிக்கு BNSS பிரிவு 230ன் படி வழக்கு ஆவணங்களின் நகல்கள் அனைத்தும் இலவசமாக வழங்கப்பட்டது. எதிரிக்கு போதிய வாய்ப்பும், சந்தர்ப்பமும் அளிக்கப்பட்டது.



SIVAPALANI
Digitally signed by SIVAPALANI
Date: 2026.05.26 16:01:58 +0530

4. குற்றச்சாட்டு:–

அரசுத்தரப்பில் முன் வைக்கப்பட்டுள்ள முகாந்திரங்கள் எதிரி குற்றம் புரிந்திருப்பார் என கருதவும், கருத்தில் கொண்டு செயலாற்றவும் வழிவகுப்பனவாக தெரிந்தமையால், எதிரிக்கு எதிராக சட்டப்பிரிவுகள் 296(b), 118(1), 351(3) BNSன் கீழ் குற்றச்சாட்டு வனைந்து எதிரிக்கு படித்துக்காட்டி, விளக்கிக் கூறி வினவியபோது எதிரி குற்றத்தை மறுத்து தான் குற்றவாளி இல்லை என்று கூறினார். எனவே வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

5. இவ்வழக்கில் அரசுத்தரப்பில் 1 முதல் 11 வரையிலான சாட்சிகள் பட்டியலிடப்பட்டு, அ.சா.1 முதல் அ.சா.4 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.6 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதிரி தரப்பில் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

6. எதிரி மற்றும் நிகழ்நிலை புகார்தாரர் தரப்பில்BNSS பிரிவு 359–ன் படி CMP.No.362/2026ல் சமரச மனு தாக்கல் செய்யப்பட்டது. BNS சட்டப்பிரிவு 296(b)–ன் படியான குற்றம் சமரசம் செய்து கொள்ள முடியாத குற்றம் என்பதால் மேற்படி மனு தள்ளுபடி செய்யப்பட்டது.

**அரசுத்தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து தெரியவரும் அரசுத்தரப்பு வழக்கின் சுருக்கம்:–**

7. வழக்கு சம்பவம் குறித்து அ.சா.1 மருதாம்பாள் என்பவர் கடந்த 04.05.2025ம் தேதியன்று கந்தர்வக்கோட்டை காவல் நிலைய காவல் உதவி ஆய்வாளர் பட்டியல் சாட்சி–10 மார்நாடு என்பவரிடம் புகார் வாக்குமூலம் கொடுத்துள்ளார். மேற்படி புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. காவல் உதவி ஆய்வாளர் மேற்படி புகார் வாக்குமூலத்தைப் பெற்று நிலைய குற்ற எண்.119/2025ல்,



SIVAPALANI
Digitally signed by SIVAPALANI
Date: 2026.05.26 16:02:03 +0530

சட்டப்பிரிவுகள் 296(b), 118(1), 351(3) BNSஇன் கீழ் வழக்கு பதிவு செய்து அ.சா.ஆ.2 கணினி முதல் தகவல் அறிக்கை தயார் செய்துள்ளார்.

8. காவல் உதவி ஆய்வாளர் வழக்கினை விசாரணைக்கு எடுத்துக் கொண்டு, 05.06.2025ம் தேதி காலை 07.00 மணியளவில் சம்பவயிடம் சென்று பட்டியல் சாட்சி – 6 மகேஷ்வரி மற்றும் பட்டியல் சாட்சி–7 மகாலெட்சுமி ஆகியோர் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு அ.சா.ஆ.3 மாதிரி வரைபடம் மற்றும் அ.சா.ஆ.4 பார்வை மகஜர் தயார் செய்துள்ளார். வழக்கு சம்பவத்தில் பாதிக்கப்பட்ட சாட்சியாக அ.சா.2 ராமச்சந்திரன் என்பவர் விசாரிக்கப்பட்டுள்ளார். வழக்கு சம்பவத்தை கண்ணுற்ற சாட்சியாக அ.சா.3 ரெங்கநாதன் என்பவர் விசாரிக்கப்பட்டுள்ளார். சாட்சிகளை விசாரணை செய்ததில் வழக்கின் சம்பவம் உண்மை என தெரிய வந்து எதிரியை தேடி வந்த நிலையில், கடந்த 28.06.2025ம் தேதி மதியம் 03.00 மணியளவில், தாமாக நிலையம் ஆஜரான எதிரி முத்துகுமார் என்பவரை அடையளம் கண்டு, காரணம் கூறி கைது செய்து உரிய நடைமுறைக்கு பின் நிலைய பிணையில் விடுத்துவிள்ளார். பின்னர் வழக்கின் கோப்பினை மேல்விசாரணைக்காக காவல் உதவி ஆய்வாளர் பட்டியல் சாட்சி–11 நாகராஜன் என்பவரின் பார்வைக்கு வைத்துள்ளார்.

9. பட்டியல் சாட்சி–9 மருத்துவர் பாண்டீஸ்வரி என்பவர் வழக்கு சம்பவத்தில் காயமுற்ற அ.சா.2 ராமச்சந்திரன் என்பவருக்கு சிகிச்சையளித்து அ.சா.ஆ.5 விபத்து பதிவேடுடன் கூடிய காயச்சான்று வழக்கியுள்ளார். பட்டியல் சாட்சி–8 மருத்துவர் காத்திக்கேயன் என்பவர் வழக்கு சம்பவத்தில் காயமுற்ற அ.சா.2 ராமச்சந்திரன் என்பவருக்கு சிகிச்சையளித்து அ.சா.ஆ.6 காயச்சான்று வழக்கியுள்ளார். பின்னர், காவல் உதவி ஆய்வாளர் இவ்வழக்கின் விசாரணை முடித்து, வழக்கின் கோப்பினை பார்வையிட்டு எதிரிக்கு எதிராக சட்டப்பிரிவுகள் 296(b), 118(1), 351(3) BNSஇன் கீழ் குற்ற இறுதியறிக்கை தயார் செய்து தாக்கல் செய்துள்ளார். அ.சா.4 பாலகுமார் கந்தர்வக்கோட்டை காவல் நிலைய காவல் சிறப்பு உதவி ஆய்வாளர் வழக்கு கோப்பினை பார்வையிட்டு வழக்கின் புலன் விசாரணை குறித்து சாட்சியம் அளித்துள்ளார்.



SIVAPALANI
Digitally signed by SIVAPALANI
Date: 2026.05.26 16:02:08 +0530

10. இத்துடன் அரசுத்தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டது.

11. அரசுத்தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து எதிரிக்கு பாதகமாக தோன்றும் அம்சங்கள் குறித்து BNSS பிரிவு 351(1)(ஆ)—ன் படி வினவியபோது எதிரி அதனை மறுத்து பொய்சாட்சியம் என்றார். எதிரி தரப்பில் சாட்சியாக யாரும் விசாரிக்கப்படவில்லை.

**12. விவாதம்:—**

கற்றறிந்த அரசுத்தரப்பு வழக்கறிஞர் இவ்வழக்கில், அரசுத்தரப்பு சாட்சிகள் மூலம் குற்றச்சாட்டு மெய்ப்பிக்கப்பட்டுள்ளதால் எதிரிக்கு தகுந்த தண்டனை அளிக்க வேண்டுமென்று வாதிட்டார்.

எதிரி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர், இதனை மறுத்து இவ்வழக்கில் அரசுத்தரப்பில் எதிரி மீதான குற்றம் சந்தேகத்திற்கிடமின்றி மெய்ப்பிக்கப்படாததால் சந்தேகத்தின் பலனை எதிரிக்கு அளித்து எதிரியை விடுதலை செய்யுமாறு வாதிட்டார்.

**13. தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை:—**

இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டியது என்னவெனில் எதிரி மீது அரசுத்தரப்பில் சுமத்தப்பட்ட குற்றமானது விசாரிக்கப்பட்ட சாட்சியம் மற்றும் சான்றாவணங்களின் மூலம் எந்த விதமான சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா என்பதே ஆகும்.

## தீர்வு

14. இருதரப்பும் கேட்கப்பட்டது. அரசுத்தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களும், சான்றாவணங்கள் மற்றும் வழக்காவணங்கள் நன்கு பரிசீலனை செய்யப்பட்டது.



SIVAPALANI Digitally signed by SIVAPALANI Date: 2026.05.26 16:02:13 +0530

15. அரசுத் தரப்பில், கடந்த 04.06.2025ம் தேதி இரவு 08.30 மணியளவில், அ.சா.1 மற்றும் அ.சா.2 ஆகியோர் மருங்கூரணியில் உள்ள அவர்களது வீட்டின் வாசலில் உட்கார்ந்திருந்தபோது, அங்கு வந்த எதிரி அ.சா.1ஐ பார்த்து என்னடா புண்டா மகனே தேவுடியா மகனே எனக்கு குடிக்க காசு கொடுடா என்று அசிங்கமாக பேசியதாகவும், இடுப்பில் வைத்திருந்த இலை அறுக்கும் கத்தியை எடுத்து கழுத்தில் கீறி சிறுகாயத்தை ஏற்படுத்தியதாகவும், கையில் வைத்திருந்த கத்தியை காட்டி உன்ன கொல்லாம விடமாட்டேன் என கொலைமிரட்டல் விடுத்ததாகவும் எதிரி மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

16. வழக்கு சம்பவம் குறித்து அ.சா.1 மருதாம்பாள் என்பவர் கடந்த 04.05.2025ம் தேதியன்று கந்தர்வக்கோட்டை காவல் நிலைய காவல் உதவி ஆய்வாளர் பட்டியல் சாட்சி–10 மார்நாடு என்பவரிடம் புகார் வாக்குமூலம் கொடுத்துள்ளார். மேற்படி புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. காவல் உதவி ஆய்வாளர் மேற்படி புகார் வாக்குமூலத்தைப் பெற்று நிலைய குற்ற எண்.119/2025ல், சட்டப்பிரிவுகள் 296(b), 118(1), 351(3) BNSஇன் கீழ் வழக்கு பதிவு செய்து அ.சா.ஆ.2 கணினி முதல் தகவல் அறிக்கை தயார் செய்துள்ளார்.

17. வழக்கு சம்பவம் குறித்து புகார் வாக்குமூலம் அளித்துள்ள மருதாம்பாள் என்பவர் அ.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். அவர் தனது புகார் வாக்குமூலத்தில் எதிரி தனது கணவரை அசிங்கமாக திட்டி, கத்தியால் கழுத்தை கீறி, கொலைமிரட்டல் விடுத்ததாக குறிப்பிட்டுள்ளார். ஆனால், அ.சா.1 தனது நீதிமன்ற சாட்சியத்தில், கடந்த 2025ம் ஆண்டு வைகாசி மாதம் புதன் கிழமை தேதி ஞாபகம் இல்லை என்றும், இரவு சுமார் 08.00 மணியளவில் ஆஜர் எதிரியும், தனது மூத்த மகன் ரெங்கநாதனும் பேசிக் கொண்டிருந்தார்கள் என்றும், அப்போது தனது கணவர் அவர்களை வம்பிழுத்தார் என்றும், ஆஜர் எதிரியும், தனது கணவரும் சண்டை போட்டு கட்டிக் கொண்டு விழுந்து உருண்டார்கள் என்றும் தனது புகார் வாக்குமூலத்திற்கும், அரசுத் தரப்பு வழக்கிற்கும் முற்றிலும் முரணாக சாட்சியம் அளித்துள்ளார். மேலும், அ.சா.1 தனது சாட்சியத்தில்,



SIVAPALANI Digitally signed by SIVAPALANI Date: 2026.05.26 16:02:17 +0530

எதிரி தனது மகன் என்பதால் ஊர் முக்கியஸ்தர்கள் மற்றும் குடும்ப பெரியவர்கள் முன்னிலையில் சமாதானம் பேசிவிட்டோம் என்றும், தான் கைரேகை வைத்தும், தனது மகன் கையொப்பம் செய்தும் சமாதான மனுவினை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன் என்றும், எதிரி மீது மேல்நடவடிக்கை தேவையில்லை என்றும், போலீசார் தன்னை விசாரிக்கவில்லை என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

18. வழக்கு சம்பவத்தில் பாதிக்கப்பட்ட சாட்சியாக அ.சா.2 ரவிச்சந்திரன் என்பவர் விசாரிக்கப்பட்டுள்ளர். அவர் தனது சாட்சியத்தில், கடந்த 2025ம் ஆண்டு வைகாசி மாதம் 23 ஆம் தேதி இரவு சுமார் 8.30 மணியளவில் தான் தனது வீட்டில் சாப்பிட்டு கொண்டிருந்தேன் என்றும், எதிரியும், தனது மூத்த மகன் ரெங்கநாதனும் பேசிக் கொண்டிருந்தார்கள் என்றும், அப்போது, தனது மகன் முத்துக்குமாரை சாப்பிட கூப்பிட்டேன் என்றும், அதற்கு, முத்துக்குமார் உன்னை ஒழித்தால் தான் சரியாக வரும் என்று சொல்லி, கத்தியால் தனது கழுத்தை அறுத்துவிட்டார் என்றும், தன்னை தஞ்சாவூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு அழைத்து சென்று சிகிச்சைக்கு சேர்த்தார்கள் என்றும், அங்கு சுமார் 13 நாட்கள் சிகிச்சையில் இருந்தேன் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

19. வழக்கு சம்பவத்தின்போது அ.சா.1 மற்றும் அ.சா.3 ஆகியோர் அ.சா.2 உடன் உடனிருந்ததாக அரசுத் தரப்பில் கூறப்பட்டுள்ளது. ஆனால், அ.சா.1 மற்றும் அ.சா.2 அவ்வாறு எதிரி அ.சா.2இன் கழுத்தை கத்தியால் கீறியதாக சாட்சியம் அளிக்கவில்லை. மாறாக அ.சா.1 தனது சாட்சியத்தில், எதிரியும் தனது மூத்த மகன் ரெங்கநாதனும் பேசிக் கொண்டிருந்தார்கள் என்றும், அப்போது தனது கணவர் அவர்களை வம்பிழுத்தார் என்றும், எதிரியும் தனது கணவரும் சண்டை போட்டு கட்டிக்கொண்டு விழுந்து உருண்டார்கள் என்று அ.சா.2இன் சாட்சியத்திற்கு முரணாக சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.3 தனது சாட்சியத்தில், வழக்கு சம்பவம் பற்றி தனக்கு எதுவும் தெரியாது என்றும், போலிசார் தன்னை விசாரிக்கவில்லை என்றும் அ.சா.2இன் சாட்சியத்திற்கும், அரசுத் தரப்பு சாட்சியத்திற்கும் முற்றிலும் முரணாக சாட்சியம் அளித்துள்ளார்.



SIVAPALANI Digitally signed by SIVAPALANI Date: 2026.05.26 16:02:21 +0530

20. அ.சா.4 காவல் உதவி ஆய்வாளர் பாலகுமார் என்பவர் வழக்கு கோப்பின் அடிப்படையில் வழக்கின் புலன் விசாரணை குறித்து சாட்சியம் அளித்துள்ளார். அவர் தனது சாட்சியத்தில், காவல் உதவி ஆய்வாளர் மார்நாடு இவ்வழக்கில் புகார் வாக்குமூலத்தைப் பெற்று முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளது குறித்தும், சாட்சிகளை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளது குறித்தும், காவல் உதவி ஆய்வாளர் நாகராஜன் என்பவர் வழக்கின் விசாரணை முடித்து எதிரி மீது குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளது குறித்தும் சாட்சியம் அளித்துள்ளார்.

21. இவ்வழக்கில் அ.சா.1 முதல் அ.சா.3 வரையிலான சாட்சிகள் மற்றும் எதிரி ஆகியோர் ஒரே குடும்பத்தை சேர்ந்தவர்கள் ஆவார்கள். அ.சா.2 மற்றும் அ.சா.1 கணவன், மனைவி ஆவார்கள். எதிரி மற்றும் அ.சா.3 அவர்களின் மகன்கள் ஆவார்கள். அ.சா.2இன் மனைவியான அ.சா.1 மற்றும் அ.சா.2இன் மகனான அ.சா.3 ஆகியோர் எதிரி அ.சா.2ஐ கத்தியால் தாக்கியதாக சாட்சியம் அளிக்கவில்லை. மேலும், வழக்கு சம்பவம் குறித்து அ.சா.1 காவல் நிலையத்தில் புகார் அளித்ததாக அரசுத் தரப்பு வழக்கு அமைந்துள்ள நிலையில், அ.சா.1 அவ்வாறு தனது சாட்சியத்தில் வழக்கு சம்பவம் குறித்து புகார் அளித்ததாக சாட்சியம் அளிக்கவில்லை. மேலும், அ.சா.1 தனது முதல் விசாரணையில் **"தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காண்பிக்கப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கைரேகை என்னுடையதா என்றால் எனக்கு எழுதப்படிக்க தெரியாது"** என்று சாட்சியம் அளித்துள்ளார். எனவே, அ.சா.ஆ.1 புகார் வாக்குமூலம் சந்தேகத்திற்கு உரியதாக அமைந்துள்ளது. அதனடிப்படையில் பதிவு செய்யப்பட்ட அரசுத் தரப்பு வழக்கிலும் சந்தேகம் எழுகிறது. இவ்வழக்கில் அ.சா.1 மற்றும் அசா.3 அரசுத் தரப்பு வழக்கிற்கும் அ.சா.2இன் சாட்சியத்திற்கும் முரணாக சாட்சியம் அளித்துள்ளதால், அ.சா.2 மற்றும் அ.சா.4 புலன் விசாரணை அதிகாரியின் சாட்சியத்தினை மட்டுமே வைத்து எதிரிக்கு எதிரான குற்றச்சாட்டு அரசு தரப்பில் நிரூபிக்கப்பட்டதாக கருத முடியாது. எனவே இவ்வழக்கில் அரசுத் தரப்பில் எதிரி மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டு சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்படவில்லை என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

SIVAPALANI Digitally signed by SIVAPALANI Date: 2026.05.26 16:02:26 +0530

**22. முடிவாக, எதிரி சட்டப்பிரிவுகள் 296(b), 118(1), 351(3) BNSன் கீழ் குற்றவாளி இல்லை என்று முடிவு செய்து, எதிரியை BNSS பிரிவு 271(1)–ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.**

23. வழக்குச் சொத்து இல்லை. எதிரி எழுதிக்கொடுத்துள்ள பிணைய பத்திரங்கள் மேல்முறையீட்டு காலத்திற்கு பிறகு ரத்து செய்ய உத்தரவிடப்படுகிறது.

இந்த தீர்ப்புரை முழுவதும் என்னால் சுருக்கெழுத்து தட்டச்சரிடம் சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை திருத்தம் செய்யப்பட்டு, இன்று 26.05.2026ம் தேதியில் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

SIVAPALANI Digitally signed by SIVAPALANI Date: 2026.05.26 16:02:30 +0530

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**கந்தர்வகோட்டை.**

**<u>அரசுத்தரப்பு சாட்சிகள்:–</u>**

| **அரசு தரப்பு சாட்சிகளின் வரிசை** | **சாட்சிகளின் பெயர்** | **சாட்சிகளின் விபரம்** |
|---|---|---|
| அ.சா.1 | திருமதி. மருதாம்பாள் | புகார்தாரர் |
| அ.சா.2 | திரு. ரவிச்சந்திரன் | பாதிக்கப்பட்ட சாட்சி |
| அ.சா.3 | திரு. ரெங்கநாதன் | கண்ணுற்ற சாட்சி |
| அ.சா.4 | திரு. பாலகுமார் | கூடுதல் சாட்சி (காவல் சிறப்பு உதவி ஆய்வாளர்) |

**<u>அரசு தரப்பு சான்றாவணங்கள்:–</u>**

| **சான்று ஆவணங்களின் வரிசை** | **தேதி** | **சான்றாவணங்களின் விபரம்** | **யாரால் நிரூபிக்கப்பட்டுள்ளது** |
|---|---|---|---|
| அ.சா.ஆ.1 | 22.05.2026 | புகார் வாக்குமூலம் | அ.சா.4 |
| அ.சா.ஆ.2 | 22.05.2026 | முதல் தகவல் அறிக்கை | அ.சா.4 |

| | | | |
|---|---|---|---|
| அ.சா.ஆ.3 | 22.05.2026 | மாதிரி வரைபடம் | அ.சா.4 |
| அ.சா.ஆ.4 | 22.05.2026 | பார்வை மகஜர் | அ.சா.4 |
| அ.சா.ஆ.5 | 22.05.2026 | விபத்து பதிவேடுடன் கூடிய காயச்சான்று | அ.சா.4 |

**அரசு தரப்பு சான்று பொருட்கள்:–** இல்லை

**எதிரி தரப்பு சாட்சிகள் சான்றாவணங்கள் மற்றும் சான்று பொருட்கள்::–** இல்லை

**குறிப்பு:–**

1. எதிரி 28.06.2025 அன்று கைது செய்யப்பட்டு, அன்றைய தினமே நிலைய பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

2. சாட்சிகள் மூன்று தினங்களுக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை.

3. இவ்வழக்கின் தீர்ப்பு சம்பந்தப்பட்ட காவல் நிலையத்திற்கு தெரிவிக்கப்பட்டுள்ளது.

4. இவ்வழக்கில் வழக்கு சொத்து இல்லை.

5. வழக்கின் தீர்ப்பு நகல் மாண்பமை தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் புதுக்கோட்டை அவர்களுக்கு பணிந்து சமர்ப்பிக்கப்பட்டது.

SIVAPALANI Digitally signed by SIVAPALANI Date: 2026.05.26 16:02:36 +0530

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**கந்தர்வகோட்டை.**